சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.270/2019

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 01.04.2022 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிதம்பரம் | கிராமம் | : |
| த/பெ | : சுந்தரராஜன் | வட்டம் | : |
| மதம் | : | தொழில் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல்தகவல்அறிக்கை உண்மைநகல் - ம.சா.ஆ.1

2) மருத்துவ பில்கள் அசல் - மசா.ஆ.2.

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

சம்பவசயமத்தில் நான் எனது வீட்டு வாசல்படியில் நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு இருச்சக்கர வாகனம் என்மீது வந்து மோதியது. நான் சாலையை கடக்க முயற்சி செய்த போத இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால்சரியல்ல. நான் ஓரமான நின்றிருந்தால் இந்த விபத்தே ஏற்பட்டிருக்காது என்றால்சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் சரியான திசையில் கவனமாகன தான் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால்சரியல்ல. எனக்கு மருத்துவமனையில் இரண்டு அறுவை சிகிச்சை செய்தார்கள். என்னை மருத்துவமனையில்இருந்து நல் ல நிலையில் விடுவித்தார்கள் என்றால்சரியல்ல. மருத்துவமனையில்இருந்து என்னை நல்ல நிலையில் தான் விடுவித்தார்கள் என்றும், இந்த விபத்தினால் எனக்கு எந்தவித உபாதைகளும் இல்லை என்றும் சொன்னால்சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்கள் என்னால் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களுக்கும் சம்பந்தமில்லை என்றால்சரியல்ல. நான் விபத்திற்குமுன்பு மரவேலை செய்து வந்தேன். தற்போது நான் எந்தவேலையும் பார்க்கவில்லை. நான் முன்னர் பார்த்து வந்த மர ஆசாரி வேலையை தற்போது ம் பார்த்து வருகிறேன் என்றால்சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எந்தவித நிரந்தர ஊனமும் இல்லை என்றால்சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின்ஓட்டுநருக்கு

முறையான ஓட்டுநர் உரிமைம் இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால்சரியல்ல. நா்ன கோரியுள்ள நஷ்டஈடு மிகஅதிகம் அது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால்சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல. விபத்து சாலையின் மையப்பகுதியில் நடந்ததால் தான் போலீஸாரின் மாதிரி வரைப்படத்தை நான் தாக்கல் செய்யவி்லை என்றால்சரியல்ல.விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதால் எனக்கு நஷ்டஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காக தவறாக 1ம் எதி்ர்மனுதாரரின் ஓட்டுநர் மீது முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால்சரியல்ல. வாகனம் வருவதை கவனித்து நான் ஓரமாக நின்றிருந்தால் இந்த விபத்தே ஏற்பட்டிருக்காது என்றும், இந்த விபத்திற்கு முழுக்காரணமும் நான் தான் என்றும் சொன்னால்சரியல்ல.

ஒம்/ சிதம்பரம்

M SHUNMUGA KANI

Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2022.04.04 15:14:23 +0530

சார்பு நீதிபதி,

குளித்தலை.